வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    03.09.2025 புதன்கிழமை    இதழ் : 246    பக்கங்கள் : 08

# இனவாத அரசியலுக்கு நாட்டில் இனி இடமில்லை

## ஜனாதிபதி அநுர குமார



முல்லைத்தீவு, செப்ரெம்பர் 03

**நாட்டில் இனவாத அரசியல் மீண்டும் தலைதூக்குவதற்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.**

'கற்பகதரு வளம்' தேசிய திட்டத்தை நேற்று செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இனவாத அரசியல் ஒருபோதும் பொதுமக்களுக்கு சேவை செய்ததில்லை. அரசியல் வாதிகளால் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக மட்டுமே இருந்து வருகிறது. அத்தகைய இனவாத அரசியல் எந்த வடிவத்திலோ அல்லது இடத்திலோ எழுந்தால் மக்கள் அதை நிராகரிப்பார்கள்."

"30 ஆண்டுகால யுத்தம் நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய சோகம். அதன் விளைவாக, அது மக்களிடையே பிளவுபட வழிவகுத்தது. வடக்கு - தெற்கு இரண்டிலும் அதிகாரத்தை பெறுவதற்கு தேசியவாதம் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவியாக மாறிவிட்டது.

"மக்கள் அந்த பிளவுபடுத்தும் அரசியல் அணுகுமுறையை கடந்த தேர்தலில் தோற்கடித்தனர். இப்போதும்கூட,

07

## அரியாலை மனித புதைகுழியில் இதுவரை 222 எலும்புக்கூடுகள்!

- இ. ராஜ்குமார் -

யாழ்ப்பாணம், செப். 03

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்றைய தினம் மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் புதிதாக கண்டறியப்பட்டன.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை அகழும் பணி நேற்று 41ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

07

## "கச்சதீவில் ஓர் அங்குலமேனும் விட்டுக்கொடுக்க மாட்டோம்!"

கண்டி, செப். 03

இலங்கைக்கு சொந்தமான கச்சதீவில் ஓர் அங்குலத்தைக்கூட நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று விவசாய, கமநல சேவைகள் நீர்பாசன அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் கூட்டம் ஒன்றின் பின்னர் ஊடகங்களை அமைச்சர் சந்தித்தார். இதன் பின்னரே அவர் மேற்கண்டவாறு

07

## நெடுந்தீவு - கச்சதீவை இணைத்து புதிய சுற்றுலா மேம்பாட்டு திட்டம்

### ஆராய்கிறது அரசாங்கம்

யாழ்ப்பாணம், செப். 03

நெடுந்தீவு, கச்சதீவை ஒன்றிணைக்கும் வகையிலான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்படுகிறது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் இணைந்து நேற்று முன்தினம் கச்சதீவுக்கு கண் காணிப்புப் பயணம் மேற்கொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

## வட்டுவாகல் பால நிர்மாணத்தை ஜனாதிபதி தொடக்கி வைத்தார்




முல்லைத்தீவு, செப். 03

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியாக அநுர குமார பதவியேற்று ஓர் ஆண்டு நிறைவடைகிறது. இதை முன்னிட்டு விசேட

07

## போரை வென்ற படையினரை பாதுகாக்க முன்வரவேண்டும்

### மகாநாயக்க தேரர்களுக்கு பொதுஜன பெரமுன கடிதம்

கொழும்பு, செப். 03

"பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர போராடிய இராணுவத்தினரை அரசாங்கம் ஒடுக்குகிறது", என்று குற்றஞ்சாட்டி அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களுக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி கடிதம் எழுதியுள்ளது.

நேற்றைய திகதியிடப்பட்ட அந்தக் கடிதங்களில் பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர்

07

## டிஜிற்றல் தொழில்நுட்பம் மூலம் விவசாயம் மேம்படுத்தப்படும்!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, செப். 03

டிஜிற்றல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயத் துறையின் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ருகுணு பல்கலைக்கழக

07



## பெரிய எலும்புக்கூட்டின் அருகாக சிறிய எலும்புக்கூடு

யாழ்ப்பாணம், செப். 03

பெரிய எலும்புக்கூட்டுக்கு மிக நெருக்கமாக சிறிய எலும்புக்கூடு நேற்றைய அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்டன.

பெரிய எலும்புக்கூட்டின் தோள்பட்டையுடன் தொடுகையுற்றவாறு ஒப்பீட்டளவில் சிறிய எலும்புக்கூடு புதைகுழியில் காணப்பட்டது.

குறித்த எலும்பு கூடுகளை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அவை இன்றைய தினம் முற்றாக அகழ்ந்து எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த நாட்களில்

07

## வட்டுவாகல் பாலம் திட்டத்தில் ரூ. 40 கோடி சேமிக்கப்பட்டது

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

முல்லைத்தீவு, செப். 03

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண செலவு 40 கோடி ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. சேமிக்கப்பட்ட நிதி வன்னி மாவட்டத்தின் நெடுஞ்சாலை அமைப்பு - திருத்தப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் என்று நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகள் நேற்று ஜனாதிபதி அநுர குமாரவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்விலேயே அமைச்சர்

07

### சம்பூரில் மனித எச்சம்

## வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

திருகோணமலை, செப். 03

சம்பூரில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டதையடுத்து அந்த இடத்தை அகழ்வதற்காக மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட உத்தேச செலவின பட்டியலுக்கு அனுமதி கிடைக்காததால் நேற்று அழைக்கப்பட்ட வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதி கோரிய போராட்டம் பளையில்

கிளிநொச்சி, செப். 03

அரியாலை மனிதப் புதை குழி உட்பட வடக்கு, கிழக்கிலுள்ள மனிதப் புதைகுழிகளுக்கும் தமிழினப் படுகொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் நேற்றும் பளையில் நடைபெற்றது.

இந்தக் கையெழுத்துப் போராட்டம் தமிழ்த் தேசிய கட்சிகள், பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமானது.

நேற்றைய கையெழுத்துப் போராட்டத்தில் மூன்று இனத்தைச் சேர்ந்தவர்களும் கையொப்பங்களை இட்டனர். (ஐ-05)

# மருதனார்மடத்திலும் நேற்று கையெழுத்துப் போராட்டம்!



யாழ்ப்பாணம், செப். 03

அரியாலை மனிதப் புதை குழி உட்பட வடக்கு, கிழக்கிலுள்ள மனிதப் புதைகுழிகளுக்கும் தமிழின படுகொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் நேற்று மருதனார்மடத்தில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் வலி. தெற்கு பிரதேச சபையின் முன்றலில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் பிரதேச வாழ் மக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஜனாதிபதியின் யாழ். நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க விடாது நெருக்கடி!

யாழ்ப்பாணம், செப். 03

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கலந்து கொண்ட நிகழ்வுகளில் செய்தியாளர்கள் சுதந்திரமாக செய்தி சேகரிக்கவும் புகைப்படம் எடுக்கவும் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் ஊடக அமைச்சின் அடையாள அட்டைகளுடன் சென்ற செய்தியாளர்களை புகைப்படம் காணொலி, எடுக்கத் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். அத்துடன், சில இடங்களில் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி வழங்கவும் இல்லை.

இதேநேரம், சமூக ஊடகத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு காணொலி எடுப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த விடயங்கள் ஊடகவியலாளர்களிடத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி அநுர குமார மயிலிட்டி, மாவட்ட செயலகம் மண்டைதீவு, யாழ்ப்பாணம் பொது நூலகம் என்பவற்றில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பனங்கூடலுக்கு தீ வைப்பு; கண்டுகொள்ளாத பொலிஸ்!

கிளிநொச்சி, செப். 03


தனியார் காணி ஒன்றில் அத்துமீறி நுழைந்த சிலர் பனை மரங்களை தீ வைத்து எரித்தனர். இதில், பல மரங்கள் அழிந்தன. இது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்ட போதிலும் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் - மண்ணியாகுளம் குடியேற்ற பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண் ஒருவருக்கு சொந்தமான சுமார் 24 ஏக்கர் வயல் மற்றும் பனங்கூடலுக்கு நுழைந்தவர்களே இந்த நாசகாரியத்தை செய்துள்ளனர். பனை மரங்கள் எரித்து அழிக்கப்பட்டமை தொடர்பில் காணி யின் உரிமையாளர் பனை அபிவிருத்தி சபைக்கு முறையிட்டார். ஆனால், அவர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க அதிகாரமில்லை என்றும் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமாறும் கூறினர்.

பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலின்படி இந்தச் சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளர் அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் கடந்த 29ஆம் திகதி முறைப்பாடு அளித்தார். எனினும், அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேசமயம், வடக்கு மாகா



ணத்தில் அழிந்து வரும் பனை மரங்களை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன அரசாங்கம் கூறுகிறது. ஆனால், பன்னெடுங் காலம் பழமையான மரங்கள் அழிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காதிருப்பது குறித்து பொது மக்கள் விசனம் அடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

# பொலிஸ் சுற்றுலா விடுதி திறப்பு!

மன்னார், செப். 03

மன்னார் - வங்காலை பொலிஸ் நிலையத்தின் சுற்றுலா விடுதி நேற்று முன்தினம் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# தர்மலிங்கத்தின் 40ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், செப். 03

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கத்தின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. தாவடியில் அமைந்துள்ள அமரரின் நினைவுத் தூபியில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

புளொட் தலைவரும் அமரரின் புதல்வருமான த. சித்தார்த்தன் சுடர் ஏற்றி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதைத் தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்றவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், வவுனியா மாநகர சபை முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி. நிரோஸ் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலர் பங்கேற்றனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழர் விடுதலை கூட்டணியை சேர்ந்தவரான வி. தர்மலிங்கம் உடுவில் - மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர், 1985 செப்ரெம்பர் 2ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விதை தேங்காய் உற்பத்தி அலகை பளையில் திறந்து வைத்தார் ஜனாதிபதி

கிளிநொச்சி, செப். 03

வடக்கு தெங்கு முக்கோண திட்டத்தின் கீழ் வடக்கின் முதல் விதைத் தேங்காய் உற்பத்தி அலகு நேற்று பளையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளை வடக்கு தெங்கு முக்கோணமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் கீழ் இந்த ஆண்டுக்குள் வடக்கில் 16 ஆயிரம் ஏக்கரில் தென்னையை பயிரிட எதிர்பார்க்கப்படுகிறது. 2025 முதல் 2027 வரையிலான 03 ஆண்டுகளில் இது 40 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்றைய நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் கே. இளங்குமரன், வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



# உயர்தர மாணவர்களுக்கு ஏ. ஐ. குறித்து செயலமர்வு!

வவுனியா, செப். 03

உயர்தரத்தில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் முறைகளுக்கான செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) செயலமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

வவுனியா பல்கலைக்கழக தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தால் இந்த செயலமர்வு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இதில், பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பல்துறை செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மன்றத்தின் பேராசிரியர்கள், கலாநிதி பட்ட மாணவர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள் இந்த செயலமர்வில் வளவாளர்களாக கலந்து கொண்டு செயற்கை நுண்ணறிவு தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

வவுனியா பல்கலைக்கழக தொழில்நுட்ப கற்கைகள் பீட பீடாதிபதி வி. செந்தூரன் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜா, பேராதனை பல்கலைக்கழக கணினி பொறியியல் பேராசிரியர் ரொஷான் ராகல், பாடசாலை மாணவர்களுக்கு எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.09.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பந்து இப்போது ஜே.வி.பியின் பக்கம்

விடுதலைப் புலிகள் அமைப்பு கருத்தியல் ரீதியில் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை என்று ராஜபக்ஷ முகாமின் நம்பிக்கைமுகமான நாமல் ராஜபக்ஷ கூறுகிறார். விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்தவர்கள் தாமே என்று கூறுவதை ஒரு தேர்தல் முதலீடாகக் கொண்டிருக்கின்ற தரப்பைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு கூறுவதானது அடிப்படையிலேயே முரண்பாடானது. ஓர் அமைப்பின் தோல்வி என்பது அந்த அமைப்பை கருத்தியல் ரீதியிலும் தோற்கடிப்பதுதான். கருத்தியல் ரீதியில் ஓர் அமைப்பைத் தோற்கடிக்க முடியவில்லை என்றால் அந்த அமைப்பைத் தோற்கடித்தமைக்கான உரிமையையும் ஒருவர் கோர முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உருவாக்கம் என்பது இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள ஆளும் வர்க்கத்தின் குறுகிய அரசியல் வாதங்களாலும் தமிழ் மிதவாத தரப்புகளை புறந்தள்ளியமையாலும் நிகழ்ந்த ஒன்றாகும். செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் ஆகக்குறைந்த கோரிக்கைகளுக்கு செவிமடுத்திருந்தால் இலங்கைத் தீவில் தமிழர் அரசியல் வன்முறையை நோக்கி நகர்ந்திருக்காது. கொழும்பின் ஆட்சியாளர்கள் மிதவாதிகளை புறந்தள்ளியமையால்தான் மிதவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தமிழர் அரசியல் இளைஞர்களின் கட்டுப்பாட்டுக்குள் வீழ்ந்தது. மிதவாதிகள் தங்களின் தலைமைத்துவத்தை முழுமையாக இழந்து போயினர்.

இந்தப் பின்புலத்தில் நகர்ந்த அரசியல்தான் பின்னர் ஓர் உள்நாட்டு யுத்தமாக வளர்ச்சியடைந்து 2009இல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட கொழும்பின் ஆட்சியாளர்களால் தமிழர்களின் அடிப்படையான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் கடப்பாட்டை உணரமுடியவில்லை. முன்னைய ஆட்சியாளர்கள் எவ்வாறு தவறிழைத்தனரோ அதே தவறைத்தான் இப்போது அரசியலுக்கு தலைமை தாங்குபவர்களும் தொடர்கின்றனர். இந்த நிலையில் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஓர் அமைப்பின் கருத்து இன்னமும் தொடர்கிறது என்றால் அதற்கான காரணத்தைத் தங்களின் பக்கம் தேட வேண்டுமே தவிர தமிழர் பக்கத்தில் தேடக்கூடாது.

2009இற்கு பின்னர் அரசியல் தீர்வைக் காண்பதற்கான சிறந்த வாய்ப்பு ராஜபக்ஷக்களின் வசமானது. மகிந்த ராஜபக்ஷ தூரநோக்குடன் சிந்தித்து செயல்பட்டிருந்தால் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் இணக்கமான தீர்வைக் கண்டிருக்கலாம். மகிந்த ராஜபக்ஷ அப்போது பதின்மூன்று பிளஸ் என்று கூறிக்கொண்டிருந்தார். இதில் தமிழர் பக்கத்தில் கூறப்படும் மாகாண சபைகள் தொடர்பான வாதங்கள் முக்கியமானதல்ல. ஓர் ஆட்சியாளராக எதைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்வதுதான் முக்கியம். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் ராஜபக்ஷவின் பக்கமாக இருந்தது. ஆனால், யுத்த வெற்றிவாதத்தின் - தன்மோக அரசியலுக்கு முன்னுரிமையளித்த ராஜபக்ஷ வாய்ப்பை உதாசீனம் செய்தார்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இப்போது அந்த வாய்ப்பு ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக நகர்ந்திருக்கிறது. வாய்ப்புகள் காலத்துக்குக் காலம் கிடைக்கிறது. ஆனால், அதனை கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டு தூரநோக்குடன் செயலாற்றும் தலைமையை நாடு கொண்டிருக்கிறதா என்பதுதான் கேள்வி. ஒரு காலத்தில் வன்முறையால் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று கருதி அதற்காக இரண்டு முறை முயன்று தங்களின் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களை இழந்து போன ஜே. வி. பியால் மற்றவர்களை விடவும் விடயங்களை ஆழமாகவும் சரியாகவும் புரிந்து கொள்ள முடியும். ஆனால், காலத்துக்குப் பொருத்தமான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் அரசியல் துணிவுடன் அவர்கள் இருக்கின்றனரா? இந்தக் கேள்விக்கு சரியான பதிலை நாடு காணாதவரையில் பிரச்னைகளும் தீரப் போவதில்லை. உண்மையில், பிரச்னைகளை சாத்தியமான வழிகளில் தீர்க்க வாய்ப்புகள் இருக்கின்றபோது அதனைப் புறந்தள்ளினால் இரண்டு பக்கத்திலும் கடும்போக்காளர்களே எழுச்சியுறுவர். இதுதான் இதுவரையான இலங்கைத் தீவின் அரசியல்.

# வவுனியா வடக்கு பிரதேச சபையிலிருந்து வெளியேற முயன்ற உத்தியோகத்தர்கள்

## தவிசாளரின் நடவடிக்கையால் உத்தியோகத்தர்கள் குழப்பம்

வவுனியா, செப். 03

வவுனியா வடக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தவிசாளரின் செயல்பாடுகளால் அலுவலகத்தில் இருந்து வெளியேற முற்பட்ட நிலையில் உப தவிசாளரின் கோரிக்கையை அடுத்து அவர்கள் அதனைக் கைவிட்டனர்.

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தொடர்ச்சியாக நிர்வாக செயல்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதால் செயலாளர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளதுடன் நேற்று முன்தினம் பணிமனையில் இருந்து வெளியேறுவதற்கும் தீர்மானித்திருந்தனர்.

உத்தியோகத்தர்களுடன் கடும் தொனியில் செயல்பட்டு வருகிறார் என்று ஊழியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் சிலர் பணிமனையில் இருந்து வெளியேறி பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடவிருந்ததுடன் உயர் அதிகாரிகளிடம் முறையிட முனைப்பு எடுத்த போதிலும் உப தவிசாளர் சஞ்சுதன் மற்றும் இரு ஆளும் கட்சி உறுப்பினர்கள் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களிடம் 5 நாள் அவகாசம் கேட்டதுடன் தாம் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து உத்தியோகத்தர்கள் தமது செயல்பாட்டை கைவிட்டனர் என்று கூறப்படுகிறது.

(ஐ-10)

# பாதாள குழுவுக்கு 90 நாட்கள் மறியல்

கொழும்பு, செப். 03

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட பாதாள உலகக் குழுவின் முக்கியஸ்தர்கள் ஐவரும் 90 நாட்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் என்று குற்றப் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட ஐவரும் கடந்த சனிக்கிழமை நாட்டுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர். (ஐ)

# வவுனியா விபத்தில் 3 பேர் காயம்!

வவுனியா, செப். 03

முன்னால் சென்ற இரு மோட்டார் சைக்கிள்களை பட்டா ரக வாகனம் மோதியதில் இரு பெண்கள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

வவுனியா, பட்டானிச் சூரில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், படுகாயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-10)

# நூல் வெளியீட்டு நிகழ்வு



கிளிநொச்சி, செப். 03

'எழுநா' வின் ஏற்பாட்டில் காவேரி கலாமன்றத்தின் அனுசரணையில் விவசாய பீடத்தின் சமுதாய மேம்பாட்டுக்குழுவின் ஆதரவுடன் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரியின் 'வடக்கு - கிழக்கு பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' என்ற நூல் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக விவசாயபீட கேட்போர் கூடத்தில் இந்த நூல் வெளியீடு நடைபெற்றது.

தலைமை உரையை விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் வழங்க, அணிந்துரையை கிளிநொச்சி மாவட்ட முன்னைநாள் அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆற்றினார்.

முதல் பிரதியை எழுத்தாளரின் சகோதரி திருமதி பூவையற்கரசி சுந்தரலிங்கம் பெற சிறப்புப்பிரதிகளை விருந்தினர்கள் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து மதிப்பீட்டு உரையை காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் அருட்தந்தைவ. ஜோசுவா, நூலாசிரியர் பற்றிய உரையை இரணைமடு விவசாய சம்மேளனங்களின் தலைவர் சிவமோகன் ஆற்றினார். இந்த நிகழ்வில் பலரும் பங்கேற்றிருந்தனர்.

(ஐ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 03 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதிகிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

# உளக்காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்பினால் மட்டுமே திருப்திப்படுத்த முடியும்

## ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 03

உளக்காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்பினால் அன்றி வேறு எதனாலும் திருப்திப்படுத்த முடியாது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,




"மயிலிட்டி என்பது வரலாற்று முக்கியமான மீன்பிடித் துறைமுகமாகும். நாட்டில் இரண்டாவது இடத்தில் இந்த மீன்பிடித் துறைமுகம் காணப்பட்டது. கடந்த 30 வருடங்களாக காணப்பட்ட நிலைமை காரணமாக இந்தத் துறைமுக நடவடிக்கைகள் செயலிழந்து காணப்பட்டன. இந்த பிரதேசத்தில் காணி, மீனவர்களின் கடல்வளம் பகிர்வதில் உள்ள முரண்பாடு என பல பிரச்னைகள் காணப்பட்டன. எமது மீனவர்கள் சட்டவிரோதமான மீன்பிடி முறைகளைக் கடைப்பிடிக்கும் நிலைமையும் காணப்பட்டது. எமது அரசாங்கம் இந்த அனைத்து நிலைமைகளையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து துறைமுகத்தையும் கடற்றொழில் துறையையும் சீரான திசையை நோக்கிக் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறது.

இந்தத் துறைமுகத்தை முன்னேற்றகரமான துறைமுகமாக மாற்ற வேண்டும். உளக்காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்பினால் அன்றிவேறு எதனாலும் திருப்திப்படுத்த முடியாது.

எந்த அபிவிருத்தி மேற்கொண்டாலும் காணி விடுவித்தாலும் வீதிகளைத் திறந்த போதும் அவர்களின் 30 வருட கால கசப்பான அனுபவங்களை போக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

3 ஆம் கட்ட பணிகளை ஆரம்பித்து பூரண துறைமுகமாக மயிலிட்டியை மாற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்தத் துறைமுகம் உங்களுடையது. இதனை நீங்கள் தான் காக்க வேண்டும்.

எமக்கு தொல்லை கொடுத்து வரும் இந்திய படகுகளை அகற்றவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகள் எமது நாட்டில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. ஆழ்கடல் மீன்பிடித்துறை ஊடாக கடற்றொழிலை மேம்படுத்த வேண்டும். அதற்கான உதவிகளை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது"- என்றார்.

(எ)

# யாழ். மாவட்ட செயலக கட்டடத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்த முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 03

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கட்டடத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வெளியீடு செய்யப்பட்டது.

பிரதித் தபால்மா அதிபரால் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டு, யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபரால் ஞாபகார்த்த முத்திரையானது மதகுருமார்கள், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல, பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், சிறீ பவானந்த ராஜா, ஆறுமுகம் ஜெகதீஸ்வரன், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சுமிந்த பத்திராஜ உள்ளிட்டவர்களுக்கும் வழங்கப்பட்டது. (எ)

# வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 03

வடக்கு மாகாணத்தில் பெரும் பிரச்னையாகவுள்ள போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளாகத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் பொதுமக்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் கூறுகையில், கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தை நிறுவுவதாக உறுதியளித்து அதனை நிறைவேற்றியுள்ளார்.

இனி வடக்கு மாகாண மக்கள் கடவுச்சீட்டை யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும். இதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். வடக்கு மாகாணத்தில் பெரும் பிரச்னையாகவுள்ள போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும். இது தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். யுத்தத்தால் ஏற்பட்ட பிரச்னைகளை ஆய்வு செய்து அதற்கான தீர்வுகளை மேற்கொள்வது மட்டுமல்லாமல் காணிப் பிரச்னைகளுக்கான தீர்வுகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இன, மத மற்றும் மொழி வேறுபாடு இன்றி அனைவரும் சமமானவர்கள், அனைவரும் இலங்கையர் என்ற ரீதியிலேயே நோக்கப்பட்டு நாடு முழுவதும் சமமான சட்டங்கள் முன்னெடுக்கப்படும். மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வறுமை ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் வடக்கு மக்களின் பாதுகாப்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# 'அப்பாவின் நிலம்' சிறுகதை தொகுப்பு வெளியீடு

கிளிநொச்சி, செப். 03

கவிஞர் கனக பாரதி செந்தூரன் எழுதி, கடந்த ஆண்டு தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற "அப்பாவின் நிலம்" சிறுகதைத் தொகுப்பின் [illegible] கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரும் துறைத் தலைவருமான மா. ரூபவதனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஏழு மாதங்களில் மட்டும் இலஞ்சம் பெற்ற 49 பேர் கைது!

## இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, செப். 03

**இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் இலஞ்ச பெறப் பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய 49 பேர் கைது செய் யப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

குறித்த காலகட்டத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 3,937 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

அதன் அடிப்படையில் 72 சுற்றிவளைப்புகள் நடத்தப் பட்ட நிலையில் அவற்றில் 39 சுற்றிவளைப்புகள் வெற்றிய டைந்துள்ளதாக சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

அதிகளவில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் பொலிஸ் திணைக்களத்தில் பதிவானது டன், இதுவரை 17 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களில் கடமையாற் றியவர்களும் அவர்களில் அடங்குவதாக இலஞ்சம் மற் றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடந்த காலங்க ளில் இலஞ்ச வழக்குகள் தொடர் பாக 27 நபர்களை நீதி மன்றங் கள் குற்றவாளிகளாக அடையா ளம் கண்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை நவீன வசதியுடன் புனரமைக்க தீர்மானம்!




கொழும்பு, செப். 03

ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன்கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முயற்சியின் கீழ், மேம் படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய நவீன வசதியாக இந்த நிலையம் மேம்படுத்தப்பட உள்ளது என்று அமைச்சு கூறியுள்ளது.

இந்த திட்டத்திற்காக 1,395 மில்லியன் ரூபா மதிப்பிடப் பட்ட நிதி ஒதுக்கப்பட்டுள் ளது.இது 15 மாத காலக்கெடு வுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக ஏற்கனவே கேள்வி விலை மனு கோரல்கள் அழைக் கப்பட்டுள்ளன.இந்த ஆண்டு இறுதிக்குள் மேம்பாட்டுப் பணி கள் தொடங்க திட்டமிடப்பட் டுள்ளதாகவும் அமைச்சு மேலும் கூறியது. (அ)

# அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு இல்லை!

## பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி



கொழும்பு, செப். 03

அரச வைத்திய சாலைகளில் மருந்து வகைகளுக்கு எதுவித தட்டுப்பாடுகளும் இல்லை என சுகாதார, ஊடகத்துறை பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜயமுனி தெரவித்தார்.

கண்டி செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றை அடுத்து ஊட கங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- தற்போது அரச வைத்தியசா லைகளில் மருந்துகளுக்கு தட் டுப்பாடு கிடையாது. அதே போல் செயற்கையாகப் பொருத் தப்படும் கண் வில்லைகளுக்கும் தட்டுப்பாடுகள் கிடையாது.

ஆனால் சிலர் குறிப்பிட்ட கம்பனிகளது பொருட்களை மட்டும் தேடும் போது அவை திறந்த சந்தைகளில் இல்லாமல் இருக்கலாம்.

நாம் குறிப்பிட்ட சில ரகங் களை மட்டுமே வைத்தியசா லைகளுக்கு வழங்குகிறோம். ஆனால் பொதுவாக செயற்கை வில்லைகளுக்கு தட்டுப்பாடு இல்லை என்றார்.

புதிதாக வைத்தியர்களுக் கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாகவும், அவை அந்தந்த பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் களால் வெற்றிடம் உள்ளதாக தரப்பட்ட தரவுகளின் படியே நியமனங்கள் வழங்கப்படு கின்றன.

அதுவல்லாது நாம் அரசி யல் ரீதியில் தலையீடுகள் மேற் கொள்வதில்லை. சில உயர் அதி காரிகள் சரியான தகவல்களை எமக்கு பெற்றுத் தருவதில்லை.

இதனால் குறிப்பிட்ட சிலர் நீண்டகாலம் ஒரே இடத்தில் பணியாற்றும் நிலை காணப்படு கிறது. தமக்குரிய பொறுப்புக் களை மீறுவோர் அல்லது சம்பந்தமில்லாத விடயங்களில் தலையிட்டு பிரச்னைகளை உருவாக்கும் உயர் அதிகாரிக ளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம்-என் றார். (அ)

# கைதாகியுள்ள பாதாள குழு உறுப்பினர்களின் அரசியல் ரீதியான தொடர்பு பற்றி விசாரணை!

கொழும்பு, செப். 03

"இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு கொண் டுவரப்பட்டுள்ள பாதாள குழு உறுப்பினர்களுக்கு அரசியல் ரீதியில் இருந்த தொடர்புகள் பற்றி விரிவான விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது."- என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜே பால தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசியல்வாதிகளின் ஆசிர் வாதம் இருந்ததால்தான் இந்நாட்டில் பாதாளக்குழுக்கள் வளர்ச்சி கண்டன.

தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக அர சியல்வா திகள் பாதாளக்குழுக் களை பயன்படுத்தியுள்ளனர்.

பாதாளக் குழுக்களின் சொத்துகள் அரசியல் வாதிக ளின் தேவைகளுக்காக பயன்ப டுத்தப்பட்டுள்ளன.

இது பற்றி தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் விரிவான விசார ணைக்கு சி.ஐ.டிக்கு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள் ளார். அதற்கமைய விசாரணை கள் இடம்பெற்றுவருகின்றன.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்குரிய காலம் உதயமாகியுள்ளது. அதனை நாம் நிச்சயம் செய்வோம்.

கைது செய்யப்பட்டவர்க ளிடம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் பிரகாரம், பாதாள குழுக்களில் உள்ள ஏனைய உறுப்பினர்களை கைது செய்ய முடியும்-என்றார். (அ)

## இரத்தினபுரி வைத்தியசாலையின் வைத்தியர்கள் வேலைநிறுத்தம்!

கொழும்பு, செப். 03

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் வைத்திய சாலைப் பணிப்பாளரின் நடவ டிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரி வித்து நேற்று வைத்தியர்கள் அடையாள வேலைநிறுத்தத் தில் ஈடுபட்டனர்.

இந்த பிரச்னை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சு முன்னர் ஒப்புக்கொண்ட போதி லும், அதனைச் செயல்படுத்த அதிகாரிகள் தவறிவிட்டதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் நேற்று காலை 8.00 மணி முதல் இன்று காலை 8,00 மணி வரை வைத்தியர்கள் பணிப்புறக்க ணிப்புப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர். (அ)

## ரணில், சஜித்துடன் கூட்டு அமையாது!

### மகிந்த அணி திட்டவட்டம்



கொழும்பு, செப். 03

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுடன் பொதுஜன பெரமுன கட்சி ஒருபோதும் கூட்டணி அமைக்காது என்று அக்கட்சியின் பொதுச்செயலா ளர் சாகர காரியவசம் அறிவித்தார்.

மொட்டு கட்சி தலைமை யகத்தில் நேற்று முன் தினம் நடை பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒருமித்த கொள்கை களைக்கொண்ட கட்சிகளாகும். இவற்றில் இருந்து பொதுஜன பெரமுன கட்சி முற்றிலும் மாறுபட்ட கட்சியாகும்.

மேற்படி கட்சிகளினதும், எமது கட்சியினதும் கொள்கை களுக்கிடையில் பாரிய வித்தி யாசம் உள்ளது.

எனவே, எந்த சூழ்நிலை யிலும் எமது கட்சி, மேற்படி இரு கட்சிகளுடனும் கூட்டணி அமைக்காது. எமது கட்சியின் பயணம் மக்கள் விரும்பும் வகை யில் தனிவழியில் தொடரும் .

பொதுஜன பெரமுனக் கட்சியின் கொள்கைகளை ஏற்கும் தரப்பினர் மாத்திரமே எம்முடன் இணைய முடியும்.

கடந்த காலங்களில் எம்மு டன் கூட்டணி வைத்திருந்த வர்கள் கூட்டணி உறவை தொடர்வதில் எவ்வித தடை யும் இல்லை - என்றார். (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தைத் தவிர்க்க அரசு முயற்சி!

கொழும்பு, செப். 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் அர சாங்கத்தால் இன்னும் நிறைவேற் றப்படவில்லை. இந்நிலையில் பிரதி பாதுகாப்பு அமைச்சருக் கெதிராக சமர்ப்பிக்கப்பட் டுள்ள நம்பிக்கையில்லா பிரே ரணை மீதான விவாதத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் முயற் சிக்கிறது. இந்த விடயத்தில் சபா நாயகரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் அஜித் பி பெரேரா தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவி யலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் அர சாங்கத்தால் இன்னும் நிறை வேற்றப்படவில்லை.

இவ்வாறான நிலைமையில் தான் தாக்குதல்கள் நடைபெற் றபோது கிழக்கு கட்டளை தள பதியாக செயற்பட்டவர் இன்று பிரதி பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கின்றார்.

இதனை அடிப்படையாகக் கொண்டே சகல எதிர்க்கட்சிக ளும் இணைந்து அவருக்கெதி ராக நம்பிக்கையில்லா பிரே ரணையை சமர்ப்பித்தன.

ஆனால் சபாநாயகரால் இது வரை இது தொடர்பில் எந்த வொரு அறிவித்தலும் வழங்கப் படவில்லை. இது பாராளு மன்ற நிலையியற் கட்டளைகளுக்கு புறம்பானதல்ல என சட்டமா அதிபர் சபாநாயகருக்கு அறிவித் திருக்கின்றார்.

எனவே இது குறித்த விவா தத்துக்கு பொருத்தமான தின மொன்றை சபாநாயகரால் ஒதுக்க முடியும்-என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் வகிப்போரின் தடையை நீக்கும் ஐ.தே.க.

கொழும்பு, செப். 03

ஐக்கிய தேசியக் கட்சியி னால் உறுப்புரிமை இடைநீக் கம் செய்யப்பட்டுள்ள தற் போது ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் வகிப்பவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்சித் தடையினை நீக்குவதற்கு ஐக் கிய தேசியக் கட்சி தீர்மானித் துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி நடைபெற உள்ளது.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் நடை பெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு, முன்னாள் ஜனா திபதிகள், எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளின் தலை வர்களுக்கும் அழைப்பு விடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக் கிரமசிங்கவும் இந்த நிகழ்வில் சிறப்பு உரையொன்றை நிகழ்த்த உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப் பட்டு தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளவர்க ளுக்கு விதிக்கப்பட்ட கட்சித் தடையை நீக்குவதற்கு ஐக்கிய தேசி யக் கட்சி முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் மத்திய கல்லூரியில் தீ விபத்து; கற்றல் உபகரணங்கள் எரிந்து நாசம்

திருகோணமலை, செப். 03

மூதூர் மத்திய கல்லூரியின் களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் தீ பரவல் ஏற்பட்டு பாடசாலை உபகரணங்கள் எரிந்து நாசமாகின. இந்த விபத்துச் சம்பவத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

தீ பரவியதையடுத்து பொதுமக்கள், பிரதேச சபை ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் இணைந்து நீரினைக் கொண்டு தீயை அணைத்து தீ பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சுமார் அரை மணி நேர போராட்டத்தின் பின்னர் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



இருப்பினும், மூதூர் மத்திய கல்லூரியின் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த கதிரை, மேசை, ஏனைய பெறுமதியான பல உபகரணங்கள் தீயில் எரிந்து சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# இலங்கையர் தினம் நிகழ்வுக்கு கருத்துகள் பெற்றுக்கொள்ளல்

திருகோணமலை, செப். 03

இலங்கையர் தினம் தேசிய நிகழ்வுக்கு பொதுமக்களிடமிருந்து கருத்துக்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை அரசாங்க அதிபர் ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் கே. எஸ். தில்ஹானி பங்குபற்றலுடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவின் அடிப்படையில் நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் தேசிய அடையாளத்தை முழுமையாக்குவதற்கும் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஒரு தொலைநோக்குப் பார்வையாக இந்த அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கும் இலங்கையர் தினம் தேசிய நிகழ்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)



கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தரும் மருத்துவபீட முன்னோடியுமான மறைந்த பேராசிரியர் தம்பிப்பிள்ளை வரகுணத்தின் சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. பேராசிரியர் வரகுணத்தின் அழகான வெண்ணிற பளிங்கு திருவருவச்சிலையை துணைவேந்தர் பிரதீபன் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்.

# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

கிண்ணியா, செப். 03

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைச்சேனை பகுதியின் கிண்ணியா பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

நேருக்கு நேர் இரு மோட்டார் சைக்கிள்களிலும் மோதியதில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கிண்ணியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிண்ணியா மாலிந்துரை பகுதியைச் சேர்ந்த 25 வயது இளைஞனே இவ்வாறு படுகாயமடைத்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# ஹோட்டல்கள், கடைகள்மீது ஹற்றனில் திடீர் சோதனை

ஹற்றன், செப். 03

நுவரெலியா மாவட்டம், ஹற்றன் பகுதியிலுள்ள ஹோட்டல்கள் மற்றும் சில்லறை கடைகள் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதாரமற்ற முறையில், முறையான நடைமுறைகள் இல்லாமல் நடத்தப்படும் பல ஹோட்டல்கள், கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இம்மாதம் 12ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் போது, ஹற்றன் நகரிலுள்ள இறைச்சிக் கடைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட எலும்புகள் குறித்த கடைகளுக்குப் பின்னால் குவிந்து கிடந்ததாகவும் இதனால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் கூறினர்.

இறைச்சி கடையின் உரிமையாளர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் இடையே இச்சோதனையின் போது வாக்குவாதமும் ஏற்பட்டது.

எலும்புகளை மூன்று நாட்களுக்குள் குறித்த இடத்திலிருந்து அகற்ற வேண்டும் என்றும் தவறினால் இது குறித்து சட்ட நடவடிக்கை எடுப்படும் என்றும் கடையின் உரிமையாளர்களுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பகமுவ நிர்வாக பொதுச் சுகாதார அதிகாரி அமில சோமதாசா மற்றும் ஹற்றன் - டிக்கோய நகர பொதுச் சுகாதார அதிகாரி சௌந்தர் ராகவன் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எ)

# ஆசிரியரின் சடலம் மீட்பு

நுவரெலியா, செப். 03

நுவரெலியா, வெளிமடை போம்புரு எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடிக்கொண்டிருந்த நிலையில் காணாமல் போன ஆசிரியரொருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடபுஸ்ஸல்லாவை கோடம் தோட்டத்தைச் சேர்ந்த 31 வயதுடைய கே. முரளிதரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கணித பாட ஆசிரியரான இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார். இரண்டு நாட்களுக்கு முன்பதாக போம்புரு எல்ல நீர்வீழ்ச்சியில் நீராக்கொண்டிருந்த நிலையில் இவர் காணாமல் போனார்.

இதனையடுத்து நுவரெலியா பொலிஸார் மற்றும் மனித உயிர் காக்கும் பிரிவினருடன் பொதுமக்களும் இணைந்து தொடர்ச்சியாக தேடும் பணியில் ஈடுபட்டதையடுத்து, நேற்று முன்தினம் முற்பகல் 11. 00 மணி யளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர் சுத்திகரிப்பு குழாயில் வாயு கசிவு 30 பேர் மருத்துவமனையில் அனுமதி!


கம்பளை. செப். 03

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு சொந்தமான புஸ்ஸல்லாவ டெல்டா தோட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேறிய நச்சு வாயுவை சுவாசித்ததால் நோய்வாய்ப்பட்ட 30 பேர் கம்பளை போதனா மருத்துவமனை மற்றும் புஸ்ஸல்லாவ வஹூகபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுத்திகரிப்பு நிலையத்தின் குளோரின் குழாய் அமைப்பிலிருந்து இந்த வாயு கசிந்துள்ளமை தெரியவந்துள்ளது.

தோட்டத்தில் பணிபுரிந்த 30 தொழிலாளர்கள் இந்த நச்சு வாயுவால் பாதிக்கப்பட்ட நிலையில் தரையில் விழுந்ததாகவும் அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் உள்ள சுமார் ஆயிரம் தேயிலை செடிகளும் இந்த வாயு வெளிப்பாட்டால் வாடிவிட்டன. (அ-எ)



# கடைத் தொகுதியில் தீ பரவல்

கண்டி, செப். 03

கண்டி, மடவளை நகரத்தில் கடைத் தொகுதி ஒன்று தீப்பிடித்து இரண்டு கடைகள் முற்றாக பாதிக்கப்பட்டதுடன் மூன்று கடைகள் பகுதியளவில் சேதமடைத்துள்ளன.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

மடவளை - தெல்தெனிய பிரதான சந்தியில் உள்ள உயர் ரக காலணிகள் விற்கும் கடையொன்றில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீ விபத்தால் காலணி விற்பனையகத்தில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட சொத்து சோதம் ஏற்பட்டுள்ளது.

இதே கடையின் மேல் மாடியில் இருந்த ஆடையணிகள் விற்பனை நிலையம் மற்றும் ஆடை தைக்கும் நிலையமும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டன.

அண்மித்த கடைகளுக்கு தீ பரவ ஆரம்பித்த சமயம் பொதுமக்களும் தீயணைப்புப்பிரிவினரும் இணைந்து தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பொதுமக்கள் விழிப்படைந்ததால் அதிகளவு பொருட்கள் பற்றி எரிவதில் இருந்து பாது காக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாத...

தெற்கில் உள்ள சில அரசியல் சக்திகள் மீண்டும் போர் ஏற்படும் என்ற நிச்சயமற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

எந்தவோர் இன மோதலையும் தடுக்க அரசாங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அந்த விடயத்தில் துணிச்சலான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் ஒருபோதும் தயங்காது - என்றார். (ஐ)

## கச்சதீவில்...

தெரிவித்தார்.

தென்னிந்திய அரசியல்வாதிகள் அரசியல் இலாபத்துக்காக ஒரு சில கருத்துகளை வெளியிடமுடியும். அதில் ஒன்றுதான் கச்சதீவு தொடர்பான கருத்துகளும். கச்சத்தீவு இலங்கைக்குரியது. அதனை நாம் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தமிழ்நாட்டு வாக்காளர்களை கவர்வதற்கு அல்லது மகிழ்ச்சிப்படுத்த அவர்கள் கூறும் கதைகளுக்கு நாம் குழம்பத் தேவையில்லை - என்றார். (ஐ)

## வட்டுவாகல் பால...

செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வடக்கிலிருந்து ஆர்பமானது.

இதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர், நேற்றைய தினம் முல்லைத்தீவுக்கு வருகை தந்தார். அங்கு தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன் பின்னர் மதியம் ஒரு மணியளவில் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகளை ஆரம்பித்து வைத்தார். இதற்காக முல்லைத்தீவுக்கு வந்த ஜனாதிபதியை அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் வரவேற்றார்.

தொடர்ந்து பாலத்தின் நிர்மாண பணிக்கான பெயர் பலகையை ஜனாதிபதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திலகநாதன், ஜெகதீஸ்வரன், ரவிகரன், மதகுருமார், திணைக்களங்களின் அதிகாரிகள், தவிசாளர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## போரை...

சாகர காரியவசம் கையொப்பமிட்டுள்ளார்.

அந்தக் கடிதங்களில், "பயங்கர வாதம் 16 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்தாலும் அதன் பின்னணியிலுள்ள சித்தாந்தம் இன்னும் நீடிக்கிறது. அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு ஆதரவளித்த வெளியாரின் அழுத்தங்களால் இராணுவத்துக்கு விரோதமான குழுக்களை திருப்திப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

போரை வெற்றி கொண்ட இராணுவத்தினர் நியாயமற்ற முறையில் துன்புறுத்தப்படுகின்றனர். அரசாங்கத்துக்கும் இராணுவ எதிர்ப்பு குழுக்களுக்கும் இடையே வெளிப்படையான புரிதல் இருக்கிறது. போரில் இறந்த இராணுவத்தினரை நினைவுகூரும் தினங்களை புறக்கணித்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாதத்தை மகிமைப்படுத்தும் நிகழ்ச்சிகளை அரசாங்கம் பொறுத்துக் கொள்கிறது.

நாட்டின் சுதந்திரத்துக்காக உயிரிழந்த இராணுவத்தினரின் கண்ணியத்தை பாதுகாப்பது ஒரு தேசிய பொறுப்பு. இந்த விடயத்தில் மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்தையும் ஆதரவான வழிகாட்டுதலையும் கட்சி வேண்டி நிற்கிறது", என்றுள்ளது. (ஐ)

## அரியாலை....

நேற்றைய அகழ்வு பணிகளில் புதிதாக 4 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் இந்தப் புதைகுழியில் கண்டறியப்பட்ட எலும்புக்கூடுகளின் மொத்த எண்ணிக்கை 222 ஆக உயர்ந்தது.

இதேநேரம், நேற்றைய தினம் புதைகுழியிலிருந்து 8 எலும்புக்கூடுகள் அகழப்பட்டு நீதிமன்றின் கட்டுக்காவலில் வைக்கப்பட்டன. புதைகுழியிலிருந்து இதுவரை 206 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட்டுவாகல்...

மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்துக்கான உத்தேச செலவு 180 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டது. ஆனால், 140 கோடி ரூபாய் செலவில் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படும். வெளிப்படையான நிர்வாகம், திறமையான திட்டமிடல் மூலமாக 40 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. சேமிக்கப்பட்ட இந்த நிதி வன்னி மாவட்டத்தின் நெடுஞ்சாலை மேம்பாட்டுக்கு வழங்கப் படும்.

மேலும், இந்த ஆண்டு வடக்கு மாகாணத்தில் பாலங்கள், நெடுஞ்சாலைகள் நிர்மாணம் - திருத்தப் பணிகளுக்காக ஆயிரத்து 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் இந்த நிதி மேலும் அதிகரிக்கப்படும் - என்றும் கூறினார்.

இதேவேளை, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகள் 2027ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தினசரி இந்தப் பாலத்தை சுமார் 3 ஆயிரம் வாகனங்கள் பயணிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வழக்கு...

சம்பூரில் மனித எச்சம் மீட்கப்பட்டது தொடர்பான வழக்கு மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிவான் தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முன்னதாக, சட்ட மருத்துவ அதிகாரி, தொல்பொருள் திணைக்களம் காணாமல் போனோர் தொடர்பான பணிமனை அதிகாரியின் ஒப்பத்துடன் மேல் நீதிமன்றத்தின் அனுமதிக்காக உத்தேச செலவு பட்டியல் கடந்த மாதம் 26ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, உத்தேச செலவு பட்டியலுக்கான மேல் நீதிமன்றின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக காணாமல் போனோர் தொடர்பான பணிமனை சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம். எம். நஸ்லீம் தெரிவித்தார்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்த கடற்கரையோர பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியின்போது கடந்த ஜூலை 20ஆம் திகதி மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டிஜிற்றல்...

விவசாய பீடத்தின் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விவசாயம் என்பது உணவு உற்பத்தி மட்டுமல்ல. அது நமது சமூகங்கள், நமது பொருளாதாரம் மற்றும் நமது உலகம் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதாகும். ஆகையால், புத்தாக்கத்துக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கு உதவி புரிதல் மற்றும் நிலையான தன்மையுடன் முன்னோக்கிச் செல்லும் அதேவேளை, கொள்கைகளை வகுத்து காலநிலை மாற்றங்களால் ஏற்படக்கூடிய சவால்களை வாய்ப்புகளாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஜெனிவாவில் படையினரை காட்டிக்கொடுப்பதற்கு சதி

## சொல்கிறார் எல்லே குணவன்ஸ தேரர்

கொழும்பு, செப். 03

"ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நாட்டை பாதுகாத்த படையினரை காட்டிக்கொடுக்கும் சதித்திட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகிறது. அரசாங்கம் அதற்கு இடமளிக்கக் கூடாது" - இவ்வாறு கூறியுள்ளார் எல்லே குணவன்ஸ தேரர்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் இந்த மாதம் நடைபெறவுள்ளது. மனித உரிமைகள் தொடர்பில் எமக்கு கற்றுக்கொடுப்பதற்கு வெள்ளையர்களுக்கு முடியுமா என்ற கேள்வி எமக்கு இருக்கிறது. நாங்கள் கால்நடைகளின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்த ஓர் இனம் நாம். அவ்வாறு இருக்கையில் மனித உரிமைகள் தொடர்பில் எங்களுக்கு ஆலோசனை வழங்க வெள்ளைக்கார்களுக்கு முடியுமா?

அத்துடன், எமது நாட்டை பயங்கரவாத யுத்தத்தில் இருந்த மீட்ட படையினரை காட்டிக்கொடுக்கும் சதித்திட்டம் ஒன்றை வெள்ளையர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் அறிந்துள்ளோம். இந்த அரசாங்கத்தின் கீழிருக்கும் பெரும்பான்மையானவர்கள், எம்முடன் இணைந்து, நாட்டுக்காக நாட்டுப்பற்றுடன் செயல்பட்டவர்கள்.

அதனால் நாட்டை மீட்ட இராணுவத்தினருக்கு நாங்கள் தெரிவித்த விடயங்கள் என்ன என்பதை இந்த அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். அதனால், ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் எமது இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் எந்த விடயங்களுக்கும் அரசாங்கம் துணைபோகக்கூடாது - என்றார். (ஐ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தருக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் நிறைவு பெறவுள்ள நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தணவேந்தர் பதவிக்கான சுற்றறிக்கையின் படி, பேரவையின் செயலாளரான பதிவாளரால் பகிரங்க விளம்பரம் மூலம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும், 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் வரைகும் - இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது நாள் வரை பதவி வகிப்பார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள், பிறந்த திகதியை உறுதிப்படுத்தத்தக்க வகையில், ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல், விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம், விண்ணப்பதாரி தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப் பதவியை வகித்தவர் எனின் அவர், தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும், எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றையும் கையளிக்க வேண்டும்.

விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அப்பதவியில் இருந்து விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதமும் பெறப்பட்டு இணைக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப்பங்கள் 'பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' என முகவரிக்கு ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு...

கச்சதீவு பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் எமது மீனவ சொந்தங்களின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு திட்டங்கள் பற்றி கடற்படையினரிடம் கேட்டறிந்தோம்.

இதேபோல சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்குரிய பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நெடுந்தீவு மற்றும் கச்சதீவை ஒன்றிணைத்த வகையில் சுற்றுலா திட்டமொன்றை மேற்கொள்வதற்குரிய சாத்தியப்பாடு பற்றியும் கேட்டறியப்பட்டது.

நெடுந்தீவுக்கு தற்போது சுற்றுலாப் பயணிகள் வரும் நிலையில் அதனை கச்சதீவு வரை மேம்படுத்துவதற்குரிய திட்டம் உள்ளது - என்றார். (அ)

# 'கலைஞனின் குரல்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 03

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் 'கலைஞனின் குரல்' மாதாந்த பத்திரிகை வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்ற பிராந்திய செயலகத்தில் மன்றத்தின் தலைவர் இரா. மதிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை கலாபூஷணம் செ. யோசெப்பாலா, சிறப்பு உரையை சி. கருணாகரன், வெளியீட்டுரையை சாவகச்சேரி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூட் அல்போன்சஸ் மேவிஸ் றீன்சியா ஆகியோர் ஆற்றுவர்.

முதல் பிரதியை மத்தியூஷ் இசையாஸ் பெற்றுக்கொள்வார். (ஐ)

## பெரிய...

மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, மூன்று சந்தர்ப்பங்களில் ஒன்றன் மேல் ஒன்றாக 6 எலும்பு கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டன. தற்போது மேலும் இரு எலும்பு கூட்டு தொகுதிகள் ஒன்றுடன் ஒன்று தொடுகையுற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரதான அலுவலகம் மீது தாக்குதல்

### அரச தரப்பின் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 03

கம்பஹா, யக்கலவில் உள்ள முன்னிலை சோஷலிசக் கட்சி பிரதான அலுவலகத்தை நேற்றுக் காலை குழுவொன்று முற்றுகையிட்டு, அங்கு இருந்தவர்களைத் தாக்கி, அலுவலகத்தை வலுக்கட்டாயமாக கைப்பற்ற முயற்சித்ததாக அந்தக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட குற்றம் சாட்டியுள்ளார்.

100 இற்கும் மேற்பட்டோர் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் அலுவலகத்திற்குள் நுழைந்ததாகவும், அந்தக் குழுவில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சியின் மாவட்ட மற்றும் பிராந்திய அமைப்பாளர்கள் இருந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த தாக்குதலைத் தடுக்க பொலிஸார் எந்த வகையிலும் தலையிடவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னிலை சோஷலிசக் கட்சிக்கு சொந்தமான இந்த அலுவலகம், கடந்த 14 ஆண்டுகளாக கட்சியால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேர்தல் நடவடிக்கைகள், கட்சி அமைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட இந்தக் கட்சியின் அனைத்து உத்தியோகபூர்வ நடவடிக்கைகளும் இந்த இடத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த முன்னிலை சோஷலிசக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் சுஜித் குருவிட்ட, இந்தத் தாக்குதல் அரசாங்கத்துடன் தொடர்புடைய ஒரு குழுவால் நடத்தப்பட்டதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஒருவர் ஒரு இடத்திலிருந்து எதனையாவது அகற்ற விரும்பினால், அவர்கள் நீதிமன்ற அறிவித்தலுடன் வர வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட இடத்தில் தமது கட்சிக்குச் சொந்தமான ஏராளமான பொருட்களும், நூலகத்திற்குச் சொந்தமான புத்தகங்களும் உள்ளன என்றும் சுஜித் குருவிட்ட கூறினார். (அ)

## கல்வி மறுசீரமைப்பினால் பிரச்னைகள் அதிகரிக்கும்!

### இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 03

கல்வி மறுசீரமைப்பு மூலம் கற்றல் சார்ந்த பிரச்னைகள் அதிகரிக்கக் கூடுமே தவிர குறையாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தொடர்ச்சியாக உறுதிப்படையான கருத்துக்களை கூறி வருகிறார்.

தற்போது கல்வி அமைச்சு கொண்டு வந்துள்ள இந்த கல்வி மறுசீரமைப்புகள் கடந்த அரசாங்கம் கொண்டு வந்தவைகளாகும்.இந்த கல்வி மறுசீரமைப்பு மூலம் கல்வித்துறையில் நிலவும் பல்வேறுப்பட்ட பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமா?மாறாக, இன்னும் அதிகமான நெருக்கடிகளைச் சந் திக்க நேரிடுமா?தரம் 1 மற்றும் தரம் 6 இற்கான மறுசீர மைப்புகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப் படும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இறுதியாக 2016 ஆம் ஆண்டில் பாடநூல்கள் அச்சிடப்பட்டன.இப்போது எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன?. அதே பழைய பாடநூல்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றனசில நேரங்களில் அவை பயன்படாத நிலைக்கும் வந்துவிட்டன - என்றார். (அ)

# நிலுவையில் உள்ள சகல வழக்குகளும் டிசெம்பருக்குள் தீர்க்கப்படவேண்டும்!

### நீதிச் சேவைகள் ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு, செப். 03

**நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளையும் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் தீர்க்கவேண்டும் என நீதிச் சேவைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.**

இந்த உத்தரவு அனைத்து மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள் என அனைவருக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தரவுகள் சேகரிக்கப்பட்ட நிலையில், அவற்றின் தீர்வுகளை தாமதமின்றி வழங்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள், அந்தந்த நீதிமன்றங்களுக்கு நிர்வாக ரீதியாக பொறுப்பாக இருப்பவர்கள் தங்கள் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை அகற்றுவதற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மேலும் இவ் விடயத்தில் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும் என அனைத்து நீதிபதிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிலுவையிலுள்ள வழக்குகளை விசாரிப்பதும் தீர்ப்பதும் அனைத்து நீதிமன்ற ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப் பொறுப்பாகும். மேலும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறும் எந்தவொரு ஊழியருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (அ)

## கைதாவதை தடுக்கக் கோரி உதய கம்மன்பில மனு தாக்கல்!

கொழும்பு, செப். 03

தற்போது தாய்லாந்தில் இருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தாம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி தமது சட்டத்தரணி மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஊடக சந்திப்பொன்றில் கருத்தொன்றை தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்பின் 14(1) பிரிவின் கீழ் இது பேச்சுச் சுதந்திரமாக இருந்தாலும், அந்த உரை சமூக பிரிவினை மற்றும் இனவாதத்தை தூண்டும் வகையில் இருந்ததாகக் கூறி சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டத்தின் 3(1) பிரிவு மற்றும் குற்றவியல் சட்டத்தின்120ஆம் பிரிவு கீழ் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விசாரணையின்றி தன்னைத் தடுத்து வைக்க சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது கருத்துக்கள் எந்தவொரு இனக்குழுவையும் இலக்கு வைக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகளை குறிவைத்து தெரிவிக்கப்பட்டது என்றும் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

அத்துடன், தமது கருத்துகள் தொடர்பான குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணைகள் அரசியல் பழிவாங்கலுக்கு சமமானது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (அ)

## இத்தாலி பிரதி அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்



கொழும்பு, செப். 03

இத்தாலியின் வெளிவிவகார பிரதி அமைச்சர் மரியா ட்ரிபோடி இன்று முதல் முதல் வெள்ளிக்கிழமை வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த 10 வருட காலப் பகுதியில் முதன் முறையாக இத்தாலியில் இருந்து அதி உயர் மட்ட அதிகாரி ஒருவர் இலங்கைக்கு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு இந்த வாரம்

கொழும்பு, செப். 03

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த வாரத்திற்குள் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித் துள்ளது. (அ)

## வசந்த கரன்னகொட எழுதிய புத்தகத்துக்கு பிரிட்டனில் தடை



கொழும்பு, செப். 03

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட எழுதிய சுயசரிதை புத்தகம், பிரித்தானியாவில் அமேசன் விற்பனை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் எனும் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய எடுக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

கரன்னகொடவின் புத்தக விற்பனை பிரித்தானிய தடைச் சட்டங்களை மீறும் எனவும், தடைக்குட்பட்ட ஒருவருக்கு காப்புரிமை உள்ளிட்ட வளங்களை வழங்குவது குற்றமாக கருதப்படும் எனவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமேசனுக்கு அறிவித்திருந்தது.

பிரித்தானிய சட்டத்தின்படி, இத்தகைய மீறலுக்காக ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். அமேசன் பிரிட்டன் கிளை, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் கோரிக்கைக்கு எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

2005 முதல் 2009 வரை உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் கடற்படைத் தளபதியாக பணியாற்றிய கரன்னகொட மீது, நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் செய்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, கடந்த மார்ச் மாதம், பிரித்தானிய அரசு வசந்த கரன்னகொட உட்பட ஐவருக்கு எதிரான தடை விதித்திருந்தது. (அ)

## சாட்சியாளரை மிரட்டிய இராணுவ அதிகாரி கைது!

கொழும்பு, செப். 03

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கில் சாட்சி ஒருவரை அச்சுறுத்தி அழுத்தம் கொடுத்ததற்காக, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினால் இராணுவ லெப்டினன்ட் கேணல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவதகமவைச் சேர்ந்த 49 வயதான இராணுவ அதிகாரி, 57ஆவது படைப் பிரிவில் பணியாற்றும் அதிகாரி என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெருகல் பகுதியைச் சேர்ந்த சாட்சி ஒருவருக்கு இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம நீதவான் நீதிமன்றம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இரண்டு வழக்குகள் தொடர்பாக இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதாக அந்தப் பிரிவின் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 106.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி

கொழும்பு, செப். 03

இலங்கையின் இரண்டாம் நிலை சிகிச்சை பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்தவும், நோய் தடுப்பு மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்தவும் 106.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி தொகுப்பை ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தத் தொகுப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியிட மிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனும், தொற்றுநோய் தடுப்பு, தயார் நிலை மற்றும் பதிலளிக்கு நிதியத்திடமிருந்து 6.9 மில்லியன் அமெரிக்க டொலர் மானியமும் அடங்கும்.

இந்தத் திட்டம் வைத்தியசாலை மேம்பாட்டை ஆத ரிக்கும், விசேட சிகிச்சைக்கான அணுகலை விரிவு படுத் தும் மற்றும் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்புக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத் தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

ஆய்வகங்களை மேம் படுத்துதல், நோய் கண்காணிப்பை வலுப்படுத்துதல் மற்றும் நோய் கட்டுப்பாட்டு மையத்தை நிறுவு தல் மூலம் சுகாதார அமைப் பின் மீள்தன்மையை மேம்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org